**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 255/2019**

**வாதி தரப்பு சாட்சி–2 ஜாபர் சேட் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 02.07.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜாபர் சேட் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | |

<u>**வாதி தரப்பில் முதல்விசாரணை**</u>

1) எனக்கு இவ்வழக்கில் இருந்து அழைப்பாணை வந்தது. என்னை இவ்வழக்கில் இடைநிலை மனு எண் 977/2019 ல் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு, தாவா சொத்தை பார்வையிட்டு முதல்நிலை அறிக்கையும், இறுதிநிலை அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். நான் தாவா சொத்தை முதல்முறை பார்வையிட்ட போது நிலஅளவையர் என்னுடன் இல்லை. இரண்டாம் முறை பார்வையிட்ட போது நிலஅளவையருடன் பார்வையிட்டேன். இரண்டாம் முறை அளவிட்ட போது பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்த பகுதிகளை நில அளவையர் குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால், நில அளவையர் குறிப்பிட்ட அளவுகளை எனது அறிக்கையில் கூறியுள்ளேன். நான் தாவா சொத்தை முதலில் பார்வையிட்ட போது எவ்வாறு இருந்தது என்றால், எதிர்மனுதாரர்கள் தரப்பில் இருந்து புதிய கட்டுமான பணிகள் செய்து கொண்டிருந்தார்கள். கட்டுமான பணிகள் எந்த நிலையில் இருந்தது என்பது பற்றி எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தில் உள்ளவாறுதான் நான் பார்வையிட்ட போது இருந்ததா என்றால் ஆமாம்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1) நான் இரண்டாம் முறை தாவா சொத்தை பார்வையிட்ட போது கிராம நிர்வாக அலுவலர் எங்களுடன் இருந்ததாக எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் இருந்து இவ்வழக்கின் வழக்குரை, பதிலுரை, இ.ம.எண்.977/2019 மனுவின் மனு மற்றும் அதன் உத்தரவு ஆகியவற்றை வாங்கிச் சென்றதாக எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், நான் வாங்கிச் செல்லவில்லை. தரப்பினர்கள் தாக்கல் செய்த ஆவணங்களையும், நான் நீதிமன்றத்தில் இருந்து வாங்கிச் சென்றதாக அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான், நான் வாங்கிச் செல்லவில்லை. தல ஆய்வின் போது 10.02.2016 ம் தேதியிட்ட பாகப்பத்திரத்தை எதிர் மனுதாரர்கள் என்னிடம் காட்டினார்கள். அவ்வாறு காட்டியதாக எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

2) மேற்படி ஆவணத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாமா, வேண்டாமா என நீதிமன்றத்தில் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. 10.02.2016 ம் தேதியிட்ட ஆவணம் பதிவு செய்யப்பட்டதா அல்லது பதிவு செய்யப்படாததா என்றால் எனக்கு ஞாபகமில்லை, அதைப்பற்றி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது அறிக்கையில் எதிர்மனுதாரர் தரப்பில் கொடுத்த குறிப்பாணை 2 இணைத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி குறிப்பாணைகளை எனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஒரு குறிப்பாணையைதான் தாக்கல் செய்துள்ளேன். 2 குறிப்பாணையில் உள்ள விபரங்களையும் எனது அறிக்கையில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை, ஒரு குறிப்பாணையில் உள்ள விபரத்தை மட்டும் சொல்லியிருக்கிறேன்.

3) நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் யாரால் எடுக்கப்பட்டது, எங்கு பதிவிறக்கம் செய்யப்பட்டது என்பது பற்றி எனது அறிக்கையில் கூறியிருக்கிறேனா என்றால் இல்லை. எனது அறிக்கையில் ஆணையர்

நியமன நோக்கம் எனக் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை எதன் அடிப்படையில் எழுதினேன் என்றால், மனு மற்றும் பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகளை கேட்டு எழுதினேன். எனக்கு கொடுத்த வாரன்ட்டில் கிராம நிர்வாக அலுவலருடன் சென்று பார்வையிட உத்தவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு கொடுத்த வாரன்ட்டுடன் இ.ம.எண்.977/2019 மனு மற்றும் பிரமாண பத்திரத்தை இணைக்கப்பட்டதாக கண்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை புலவரைபடத்தில் உள்ளபடி அளவீடு செய்தால் போதும் என சம்மதம் பெற்றதாக எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரரிடமோ, அவரது வழக்கறிஞரிடமோ எழுத்து மூலமாக சம்மதம் பெற்றேனா என்றால் இல்லை.

4) மேற்படி சங்கதி குறித்து நீதிமன்றத்தில் ஏதேனும் விளக்கம் பெற்றுக் கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்களை பாகம் பிரித்துக் கொடுக்க வேண்டும் என எனக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் தரப்பில் தரப்பினரோ அல்லது வழக்கறிஞரோ தாவா சொத்தை இரண்டாக பிரித்துக் கொடுக்க வேண்டும் என எழுத்து மூலமாக கோரினார்களா என்றால் இல்லை. எனக்கு கொடுக்கப்பட்ட வாரன்ட்டில் சாட்சியை பதிவு செய்ய உத்தரவு எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்தை வடபுறம் பாதியாகவும், தென்புறம் பாதியாகவும் பிரித்துக் கொடுக்க வேண்டும் என எழுத்து மூலமாக குறிப்பாணை எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை, வாய்மொழியாக சொன்னார்கள். நான் வாய்மொழியாக சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தரப்பினர்கள் சொல்லும் சங்கதிகளை தளத்தில் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். தரப்பினர்கள் யாரும் என்னிடம் சொல்லவில்லை. இருதரப்பு வழக்கறிஞர்கள்தான் சொன்னார்கள்.

5)இருதரப்பு வழக்கறிஞர்களும் எனது வாரன்ட்டில் உள்ள சங்கதிக்கு மிகைப்பட்டு ஒரு செயலை செய்யும்படி அறிவுறுத்தினால் நீதிமன்றத்தில்

அனுமதி பெறவேண்டும் என்றால் சரிதான், ஆனால் இருதரப்பு வழக்கறிஞர்களும் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. எனது வாரன்ட்டில் தாவா சொத்தை பிரித்துக் கொடுக்க வேண்டும் என உத்தரவு இல்லை என்றால் சரிதான். நான் குறிப்பிட்ட 10.02.2016 ம் தேதியிட்ட பாகப்பத்திரத்தில் எந்தெந்த சொத்துக்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தது என எனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தை பாகம் பிரித்துத் தரவேண்டும் என எதிர்மனுதாரர் தரப்பில் கூறியதாக சொல்லும் சங்கதியை எழுத்து மூலமாக கொடுக்க வேண்டும் என கேட்டேனா என்றால் இல்லை. நான் தள ஆய்வை முடித்த பின்னிட்டு 2 குறிப்பாணை கொடுத்தார்கள். எனது அறிக்கையில் தள ஆய்வுக்கு பிறகு குறிப்பாணை கொடுத்தாக சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன்.

6) எனது அறிக்கையில் 2 குறிப்பாணைகள் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரரோ, அவரது வழக்கறிஞரோ தாவா சொத்தை பிரித்துக் கொடுக்க என்னிடம் சொல்லவில்லை என்றும், அவ்வாறு பிரித்துக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. புலவரைபடத்தின் அடிப்படையில் அளவீடு செய்ய எதிர்மனுதாரர் தரப்பில் ஒப்புக் கொண்டதாக சொல்லியுள்ள சங்கதி பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்தை அளவீடு செய்யும் போது வேறு ஏதாவது ஆவணங்கள் பார்வையிட்டதாக எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நிலஅளவையர் அவர் அளவீடு செய்தபடி நான் பார்வையிட்டேனா அல்லது நான் சொன்னதன் அடிப்படையில் அவர் அளவீடு செய்தாரா என்றால், நான் சொன்னதன் அடிப்படையில்தான் அளவீடு செய்தார். நான் TS நம்பர் படி அளக்க வேண்டும் என சொன்னேன் என்றால் ஆமாம்.

7) நான் பாகப்பத்திரத்தின்படி அளக்க சொன்னேனா என்றால், அளக்க சொன்னேன், பத்திரத்தின் படி அளவு இல்லை என நிலஅளவையர் சொன்னார். பத்திரத்தின் படி தென்வடல் எவ்வளவு அளவு உள்ளதாக சொன்னார் என்றால்,

பத்திரத்தின்படி அளக்கவில்லை. தாவா சொத்திற்கு தெற்கே கிழமேல் ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்கிலும் ரோடு உள்ளது என்றால் சரிதான். கிழமேல் ரோடு பஞ்சாயத்து ரோடு என்றால் சரிதான். கிழமேல் பஞ்சாயத்து ரோடு வடக்கு அத்தில் இருந்து வடபுறமாக எவ்வளவு தொலைவு வேண்டுமானலும் அளக்கலாம் என்றால் சரிதான். மேற்கில் உள்ள ரோட்டில் இருந்து கிழக்குபுற அத்தை நிர்ணயம் செய்து கிழக்கு நோக்கி எவ்வளவு தொலைவு வேண்டுமானாலும் அளக்கலாம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அறிக்கை எனது அதிகார வரம்பை மீறி ஒருதலைப்பட்சமாக, வாதிக்கு ஆதரவாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே, எனது அறிக்கையின்படி இவ்வழக்கில் எந்த தீர்வும் காண இயலாது என்றும், எனது அறிக்கை ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>அனுமதியின் பேரில் மீண்டும் முதல் விசாரணை:</u>**

தாவா சொத்தின் வடபுறம் வருவாய் வட்டாட்சியரின் அரசு குடியிருப்பு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்குபுறம் நகராட்சி ரோடு உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி சொத்திற்கு தென்புறம் நகராட்சி ரோடு உள்ளது என்றால் சரிதான்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வட்டாட்சியரின் அரசு குடியிருப்பு தென்வடல், கிழமேல் அளவுகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R.தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**